சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 05.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 62/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-1 |
| சாட்சியின் பெயர் | : | அபிக்கண்ணன் |
| தந்தை பெயர் | : | அன்பழகன் |
| கிராமம் | : | வீச்சூர் |
| தாலுக்கா | : | வலங்கைமான் |
| தொழில் | : | டிரைவர் |
| வயது | : | 25 |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு. ஆர். வீரபாண்டியன், அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 5 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

முதல் விசாரணையில் இரு சக்கரவாகனத்தில் வந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த இரு சக்கர வாகனத்தின் நிறம், பதிவு எண் எதுவும், புகாரிலோ, அல்லது போலீசார் விசாரணையிலோ நான் சொல்லவில்லை

என்றால் சரிதான். எனது தம்பி அ.சா.2 சஞ்சய் என்பவர் எனது உடன்பிறந்த சகோதரர் கிடையாது என்றால் எனது பெரியப்பா மகன். புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ அ.சா.2 சஞ்சய் என்பவரை எனது பெரியப்பா மகன் என குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரிகள் என்னை கட்டையாலும், பைப்பாலும் அடித்தபோது எனக்கு மண்டையில் அடிப்பட்டு இரத்தம் வந்தது. அந்த இரத்தம் எனது சட்டையில் பட்டது என்றால் சரிதான். மேற்படி இரத்தக்கறை படிந்த எனது ஆடைகளை போலீசார் என்னிடமிருந்து வாங்கவில்லை என்றால் சரிதான், கிழிந்து விட்டது. எந்தெந்த எதிரிகள் என் உடலில் எந்த பகுதியில் அடித்தார்கள் என்ற விபரத்தை பற்றி புகார் வாக்குமூலத்திலோ, போலீசார் விசாரணையிலோ நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடன் கூட வந்த அ.சா.3 சந்தோஷ் என்பவர், மேற்படி சண்டையை விளக்கி விட்டு எனது நண்பர்களுக்கு போன் செய்து வரச்சொன்னார் என்றால் சரிதான். போலீசார் விசாரணையிலோ, புகார் வாக்குமூலத்திலோ எனது நண்பர்களின் பெயர்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து வலங்கைமான் மருத்துவமனைக்கு நண்பர்களுடன் இரு சக்கர வாகனத்தில்தான் சென்றேன் என்றால் சரிதான். அந்த வாகனத்தின் நிறம், அதன் உரிமையாளர் மற்றும் பதிவெண் என்ற விபரங்களை போலீசார் விசாரணையிலோ, புகார் வாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் சரிதான். நான் டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். நான் பணிபுரியும் லாரியின் உரிமையாளர் பெயரையோ, நான் ஓட்டும் லாரியினை குறிப்பிட்டு குடவாசலில் எந்த இடத்தில் நிறுத்தி விட்டு வந்தேன் என்று போலீசார் விசாரணையிலோ, புகார் வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வலங்கைமான் மருத்துவமனையிலிருந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் கும்பகோணம் தலைமை அரசு மருத்துவமனைக்கு சென்று உள்நோயாளியாக என்னை சேர்த்தது எனது நண்பர்கள் என்றால் சரிதான். அ.சா.3 சந்தோஷ் தான் என்னை மருத்துவமனையில் சேர்த்தார் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தை வலங்கைமான் காவல் நிலையத்திலிருந்து பெண் போலீசார் வந்தார், அவர்தான் என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார். அவர் பெயரோ, அவர் வகிக்கும் பதவியோ

எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கொடுத்த வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். சிறைச்செல்வன் என்பவர் எனது பெரியப்பா. எனது பெரியப்பா ஒரு அரசியல் கட்சியில் மாவட்ட செயலாளராக உள்ளார். எனது பெரியப்பா சிறைச்செல்வன் அவர்களது தூண்டுதலின் பேரில்தான் இந்த புகாரை கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ நாளுக்கு மறுநாளான 01.01.2025 ம் தேதியன்று போலீசார் என்னை விசாரித்தார்கள். அதற்கு பிறகு நன்னிலம் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் செல்போன் மூலமாக என்னிடம் விசாரணை செய்தார்கள். இதுபோன்ற சம்பவமே நடைபெறவில்லை என்றாலும், எந்த முன்விரோதமும் இல்லாத நிலையில் அரசு ஆதாயம் பெற வேண்டுமென்பதற்காக பொய்யான புகாரை கொடுத்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. (அரசு தரப்பில் ஆட்சேபனையுடன் பதிவு செய்யப்பட்டுள்ளது.) என்னை யாரும் அடிக்கவும் இல்லை, திட்டவுமில்லை, நான் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னாலும் சரியல்ல. நாங்களாகவே மூன்று நபர்களுடன் இரு சக்கர வாகனத்தில் பயணித்து கீழே விழுந்ததால் காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.05 17:49:42 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.